TNEB
எம்ப்ளாயீஸ்
பெடரேஷன் நியூஸ்

மலர்- 4 ✧ இதழ்-6 ✧ பிப்ரவரி 2022

நிர்வாக ஆசிரியர்

**அ. சேக்கிழார்**

ஆசிரியர் குழு

**சு. மணிகண்டன்**
**J.L. பாஸ்டின் ராஜ்**
**S. இராமநாதன்**
**K. செல்வராஜூ**
**R. ஜெயராமன்**
**வீ. பாரதி**

செயலாளர் (வெளியீடு)

**A. செந்தில்குமார்**

39/101, சிங்கண்ணா தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.
✆ : 9841446621
tnebemployeesfederation3600@gmail.com

## அடுத்த கட்ட நகர்வை நோக்கி அடியெடுப்போம்!

**01.12.2019** முதல் வழங்கிட வேண்டிய ஊதிய உயர்வு பேச்சுவார்த்தையை மேலும் காலம் தாழ்த்தாது தொடங்கிட வேண்டிய அவசியத்தை வாரியத் தலைவருடன் 02.02.2022ல் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் வலியுறுத்தியுள்ளோம்.

நமது பொதுக்குழு தீர்மானங்களின் மீதான பேச்சுவார்த்தை வாரியத் தலைவர், செயலாளர், பொறியாளர் பணியமைப்பு மற்றும் உயர் அலுவலர்களுடன் சிறப்பாக நடைபெற்றதில் விரிவான விவாதம் நடைபெற்றதும் அதன் மீதான தீர்வுகளைக் கண்டிட தேவையான அறிவுரைகளை வாரியத் தலைவர் அலுவலர்களுக்கு வழங்கியுள்ளதும் மகிழ்ச்சியளிக்கக் கூடியதாக அமைந்துள்ளது. வாரியத் தலைவர் உள்ளிட்ட அனைத்து உயர் அலுவலர்களுக்கும் நன்றிகளை உரித்தாக்குவோம்.

கடந்த 09.02.2022ல் தமிழகம் முழுவதும் கேங்க்மேன்களுக்கான கோரிக்கை நாள் கடைபிடித்துள்ளதும் நமது முயற்சிக்கு மேலும் வலு சேர்த்துள்ளது மட்டுமல்லாமல் வெற்றிக்கு வழிவகுத்துள்ளது. விரைவில் உத்தரவு வெளியாகும் என நம்புவோம்.

ஒப்பந்த தொழிலாளர்கள் நிரந்தரம் குறித்து வாரியம் பேச்சுவார்த்தை நடத்திட வேண்டும் என பேசி வருகிறோம், தற்சமயம் சென்னை உயர்நீதிமன்ற பெஞ்ச்ல் நல்லதொரு தீர்ப்புக் கிடைக்கும் அளவில் 1981ம் ஆண்டின் Tamilnadu Industrial Establishments (Conferment of Permanent status to Workmen) Act படி மின்சார வாரியத்தில் 480 நாட்கள் வேலை பார்த்து நிரந்தரம் கேட்டுள்ள ஒப்பந்த தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க உத்தரவாக உள்ளது என்பதை வாரியத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளோம்.

ஊதிய உயர்வுக்கான பேச்சுவார்த்தை போக்குவரத்துத் துறையில் பேசி முடிக்கப்பட உள்ள நிலையில் தமிழக மின்சார வாரியத்தில் பேச்சுவார்த்தை நடத்திட வேண்டியதின் அவசியத்தை அரசும், வாரியமும் உணர வேண்டும்.

உள்ளாட்சித் தேர்தல் முடிவுக்கு பின்னர் ஊதிய உயர்வு தொடர்பான பேச்சுவார்த்தையும், ஒப்பந்த தொழிலாளர் நிரந்தரத்திற்கான பேச்சுவார்த்தையும் தொடங்கும் என்றும், கேங்க்மேன்களுக்கான உத்திரவுகளும் வெளிவரும் என நம்புவோம்.

பிப்ரவரி திங்கள் 26 மற்றும் 27 தேதிகளில் நடைபெற உள்ள மாநில செயற்குழுவில் இப்பிரச்சினைகளின் மீது விவாதித்து முடிவெடுத்து இயக்கங்களை முன்னெடுத்து செல்வோம்.

மின்சார வாரியத்தின் அனைத்து பகுதியினருக்கும் பணியாற்றும் சங்கமான நமது எம்ப்ளாயீஸ் பெடரேஷனை மேலும் வலுவுள்ளதாக ஆக்க வேண்டிய பணிகளை மேற்கொள்வோம். தொழிலாளர்களின் நம்பிக்கை பெற்ற அசைக்க முடியாத சக்தியாக உருவெடுத்துள்ள நாம் அடுத்த கட்ட நகர்வை நோக்கி செல்வோமாக!

**- ஆசிரியர்**

## விருதுநகர் - செங்கமலநாச்சியார்புரம் - விபத்து குறித்து நடவடிக்கை கோரி பெடரேஷன் விருதுநகர் கிளை - கடிதம்

**கடிதம் எண். 2 நாள்: 19.01.2022**

பெறுநர்

**மேற்பார்வை பொறியாளர்**

விருதுநகர் மின்பகிர்மான வட்டம்

விருதுநகர்

மதிப்பிற்குரிய அம்மா,

**பொருள் : நிர்வாகம் - உதவி மின்பொறியாளர் - செங்கமலநாச்சியார்புரம் தொழிலாளர் - விரோதப் போக்கு - அனைத்து பணியாளர்கள் - செங்கமலநாச்சியார்புரம் - மனு மீது உரிய நடவடிக்கை வேண்டுவது சம்மந்தமாக.**

**பார்வை : செங்கமலநாச்சியார்புரம் பிரிவு களப்பணியாளர்கள் - ஒட்டுமொத்த முறையீட்டு விண்ணப்பம் நாள்: *13.01.2022***

சிவகாசி கோட்டம், செங்கமலநாச்சியார்புரம் பிரிவு உதவி மின்பொறியாளர் அவர்களின் தொழிலாளர் விரோதப்பேக்கு, தொழிலாளர்களை மனித நேயமற்ற முறையில் நடத்துவது, கேங்க்மேன் பணியாளர்களை இரவு வெகு நேரம் வேலை வாங்குவதால் களத்தொழிலாளர்கள் மிகுந்த மனஉளைச்சலுடன் பணிபுரிந்து வருகிறார்கள்.

இது சம்மந்தமாக மேற்பார்வை பொறியாளர் அவர்களுடன் கடந்த 08.10.2021 அன்று நடைபெற்ற நேரடி பேச்சுவார்த்தையின்போது, நேரடியாகவும் கடிதம் மூலமும் தெரிவிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்க கேட்டுக் கொள்ளப்பட்டது.

மேலும் கடந்த 04.12.2021 அன்று செங்கமலநாச்சியார்புரம் பிரிவில் ஏற்பட்ட விபத்தில் கேங்க்மேன் பணியாளர் மரணமடைந்து, கேங்க்மேன் பணியாளர் காயமுற்றது சம்மந்தமாக விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்க கோரி கடந்த 05.12.2021 அன்று தங்களுக்கு கடிதம் அளிக்கப்பட்டது.

மேலும் கடந்த 26.12.2021 அன்று நடைபெற்ற எங்கள் சங்க கூட்ட செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி 05.01.2022ஆம் தேதியில் கடிதம் அளிக்கப்பட்டது. மேற்கண்ட எங்கள் சங்க கடிதங்களின் மீதும், நேரடி பேச்சுவார்த்தையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதையும் தங்களின் கவனத்திற்கு தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

தாங்கள் இதுநாள் வரை உதவி மின்பொறியாளர் செங்கமலநாச்சியார்புரம் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்காத சூழ்நிலையில் செங்கமலநாச்சியார்புரம் பிரிவில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களும், மிகுந்த மனவேதனையுடன் தொடர்ந்து உதவி மின்பொறியாளர் செங்கமலநாச்சியார்புரம் அவர்களது கீழ் பணிபுரிவது பாதுகாப்பற்ற சூழ்நிலை ஏற்படும் என்பதும், வாரிய விதிமுறைக்கு மாறாக பணி ஒதுக்கீட்டு பதிவேட்டில் பணி ஒதுக்கீடு செய்யப்படாத பணிகள பணி பார்க்க வலியுறுத்துவது, வாரிய பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள் இல்லாத நிலையில் ஒப்பந்த பணியாளர்களை் கொண்டு பணி மேற்கொள்வது, அதில் ஏற்படக்கூடிய பிரச்சனைகளை வாரிய பணியாளர்கள் மீது சுமத்துவது போன்ற நடவடிக்கை காரணமாக அனைத்து

பணியாளர்களும் உதவி மின்பொறியாளர் செங்கமலநாச்சியார்புரம் அவர்களை பணியிடமாற்றம் செய்யக் கோரி மனு அளித்துள்ளனர், இல்லையேல் பணியாளர்கள் தங்கள் அனைவரையும் வேறு பணியிடத்திற்கு மாறுதல் செய்திட வேண்டி செயற்பொறியாளர் / பகிர்மானம் /சிவகாசி அவர்களுக்கு கோரிக்கை மனு அளித்துள்ளனர்.

எனவே, மேற்பார்வை பொறியாளர் அவர்கள் செங்கமலநாச்சியார்புரம் பிரிவு பணியாளர்கள் மன வேதனையுடனும், பாதுகாப்பற்ற சூழ்நிலையில் பணிபுரிந்து வருவதையும், அவர்கள் கோரிக்கை மனு உரிய நடவடிக்கை எடுத்து உதவி மின்பொறியாளர் செங்கமலநாச்சியார்புரம் அவர்களை பணியிடமாற்றம் செய்து செங்கமலநாச்சியார்புரம் பிரிவு பணியாளர்கள் மன அமைதியுடன் பணிபுரிய உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

கடந்த 05.01.2022 நாளிட்ட கடிதத்தின்படி செயற்குழு தீர்மானங்களின்மீது பேச்சுவார்த்தை நடத்தி உரிய தீர்வு கண்டிட வலியுறுத்தி 15 நாட்களில் தீர்வு காணப்படவில்லையெனில் 20.01.2022 அன்று பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று தெரிவித்து இருந்தோம்.

தற்சமயம் செங்கமலநாச்சியார்புரம் பிரிவு உதவி மின்பொறியாளர் அவர்களின் தொழிலாளர் விரோத செயல்பாட்டின்மீது உரிய நடவடிக்கை எடுத்து உதவி மின்பொறியாளர் செங்கமல நாச்சியார்புரம் அவர்களை பணியிடமாற்றம் செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் கடந்த 26.12.2021 அன்று எங்கள் சங்க செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் மீதும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனில் 28.01.2022 அன்று மாலை 5.20 மணிக்கு மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பு கோரிக்கைகளை வலியுறுத்தி மாபெரும் ''ஆர்ப்பாட்டம்'' நடைபெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

போராட்ட நிலை தவிர்த்திட, தொழில் அமைதி பாதுகாக்கப்பட, தொழில் உறவு பராமரிக்க எங்கள் சங்க நிர்வாகிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி சுமூக தீர்வு கண்டிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள,
**திட்டச் செயலாளருக்காக**
மாநில உபதலைவர்

★★★

அனுப்புநர் — தேதி: 13.01.2022

**அனைத்து பணியாளர்கள்**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
செங்கமலநாச்சியார்புரம் பிரிவு, செங்கமலநாச்சியார்புரம்.

பெறுநர்

**செயற்பொறியாளர்**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்
பகிர்மானம், சிவகாசி.

ஐயா,

**பொருள் : மின்சாரம் - உதவி மின்பொறியாளர் - செங்கமலநாச்சியார்புரம் - தொழிலாளர்கள் - அடிமைபோல் நடத்துவது - ஒரே நாளில் ஒன்றுக்கும்**

**மேற்பட்ட பணி ஒதுக்கீடு செய்வது - நள்ளிரவு வரை பணி செய்ய வற்புறுத்துவது - போன்ற நடவடிக்கைகள் - தெரிவித்தல் - உரிய நடவடிக்கை வேண்டுவது - பணி பாதுகாப்பு - வழங்க வேண்டுவது சம்மந்தமாக.**

நாங்கள் செங்கமலநாச்சியார்புரம் பிரிவில் பணிபுரிந்து வருகிறோம். செங்கமலநாச்சியார்புரம் உதவி மின்பொறியாளர் அவர்களின் தொழிலாளர் விரோத நடவடிக்கை, பணியாளர்களை மனித நேயமற்ற முறையில் நடத்துகிறார். பணியாளர்களை உரிய நேரத்தில் பணி ஒதுக்கீடு செய்து பணிக்கு அனுப்புவதில் காலதாமதம் ஏற்படுத்துவது கைபேசியில் பணி ஒதுக்கீடு வழங்குவது, கைபேசியில் கூறிய பணியை முடித்துவிட்டு, செய்த பணியை பணி ஒதுக்கீட்டு பதிவேட்டில் பதிவு செய்தால் நான் கூறாத பணியை ஏன் செய்தீர்கள் என்று அனைத்து பணியாளர்களுக்கு சுற்றறிக்கை வழங்குகிறார்.

மேலும் பணி ஒதுக்கீட்டு பதிவேட்டில் பதிவு செய்த பணியை செய்து கொண்டிருக்கும்போது, கைபேசி மூலம் அழைத்து பகுதி பணியாளர்களை வேறு ஒரு பணிக்கு அனுப்புமாறு கூறுகிறார். அதனால் போதிய பணியாளர்களன்றி பணியை முழுமையாக முடிக்க இயலவில்லை.

இது சம்மந்தமாக உதவி மின்பொறியாளர் அவர்களிடம் தெரிவித்தால் நான் கூறுவதை கேட்டு பணி செய்தால் செய்யுங்கள் இல்லையேல் உங்கள்மீது நடவடிக்கை எடுப்பேன் என்று மிரட்டுகிறார்.

பிரிவு அலுவலகத்தில் பணிபுரியும், பணியாளர்களைக் கொண்டு அல்லது பிரிவு அலுவலகத்தில் பணிபுரியும் மேற்பார்வையாளர்களான முகவர் முதல்நிலை பணியாளர்களே, மின்பாதை ஆய்வாளர்களுக்கு தெரியாமல், அவராகவே ஒப்பந்த பணியாளர்களைக் கொண்டு பெருவாரியான பணிகளை செய்கிறார். இதனால் ஏதேனும் தவறு ஏற்பட்டால் எங்களுக்கு அறிவுறுத்தல் குறிப்பாணை வழங்குகிறார்.

உதாரணமாக வாகனம் மோதி மின்கம்பம் முறிந்து பல நாட்களாகியும், முறிந்த மின்கம்பத்தை மாற்றும் பணியை மேறகொள்ளாமல் வெவ்வேறு பணிகளை செய்திட பணி ஒதுக்கீடு செய்கிறார். இது சம்மந்தமாக முகவர் முதல்நிலை, மின்பாதை ஆய்வாளர்கள் கூறியபோது எந்த பணியை எப்போது செய்ய வேண்டும் என எனக்குத் தெரியும். நான் கூறும் பணியை செய்யுங்கள் என்று கூறி காலையில் இருந்து பல்வேறு விஸ்தரிப்பு பணிகள் ஒதுக்கீடு செய்து பார்த்துவிட்டு ரவு 8.00 மணிக்கு மேல் அந்த பணியை மேற்கொள்ள செய்தார். அந்த பணி நள்ளிரவுக்கு மேல் பணி முடிக்கப்பட்டது. இவ்வாறு வெகுநேரம் பணிபுரிந்து மறுநாள் காலையில் 8.00 மணிக்கு ஏன் பணிக்கு வரவில்லை என்று கேட்பது பணியாளர்களான எங்களுக்கு மிகுந்த மனவேதனையை ஏற்படுத்துகிறது.

மேலும் வாரிய விதிமுறைக்கு மாறாக பல்வேறு பணிகளில் மதிப்பீடு தயார் செய்யாமல் ஒப்பந்த பணியாளர்களைக் கொண்டு பணிகள் நடைபெறுவது, இது சம்பந்தமாக விழிப்பு பணி பிரிவிற்கு புகார் மனுக்கள், புகார் மனுக்கள் மீது விசாரணை போன்றவை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

ஒரே நாளில் ஒன்றுக்கும் மேற்பட்ட பணிகள் ஒதுக்கீடு செய்வதால் குறைந்த அளவு பணியாளர்களைக் கொண்டு பணி செய்வதால் விபத்துக்கள் ஏற்படுவதுடன் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் பணிபுரிந்து வருகிறோம்.

நாங்கள் அனைவரும் மிகுந்த மன உளைச்சலுடன் பணிபுரிந்து வருகிறோம். ஏற்கெனவே கடந்த 4.12.2021 அனறு பணியின்போது மின்கம்பம் முறிந்து விபத்து ஏற்பட்டு கேங்க்மேன் காளிராஜ் ஸ்தலத்திலேயே மரணமடைந்தார். மேலும் இரண்டு கேங்க்மேன்கள் பலத்த காயமடைந்து ஒருவர் மருத்துவ சிகிச்சையில் உள்ளார்.

மேற்குறிப்பிட்ட சூழ்நிலையில் தொடர்ந்து இவர் உதவி மின்பொறியாளராக தொடர்ந்து நீடித்தால் எங்களுக்கு பணிப் பாதுகாப்பும் இன்றி மன உளைச்சலுடன் விபத்தும் ஏற்பட வாய்ப்புகள் ஏற்படும் என அஞ்சுகிறோம். ஆகவே தொடர்ந்து பயத்துடன் பணிபுரிய நாங்கள் விரும்பவில்லை.

எனவே, மேற்கூறிய எங்களின் கருத்துக்கள் மீது உரிய விசாரணை செய்து உதவி மின்பொறியாளர் செங்கமலநாச்சியார்புரம் அவர்களை பணியிட மாற்றம் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இல்லையேல் எங்கள் அனைவரையும் வேறு பிரிவிற்கு பணியிடமாறுதல் செய்து எங்களுக்கு பணி பாதுகாப்பும், உயிர்பாதுகாப்பும் வழங்கிட வேண்டுமாய் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு

தங்கள் உண்மையுள்ள,

**செங்கமலநாச்சியார்புரம் பிரிவு பணியாளர்கள்**

| வ.எண். | பெயர் | பதவி |
|---|---|---|
| 1. | கு. பூபாலன் | முகவர் |
| 2. | க. சின்னமாரியப்பன் | முகவர் |
| 3. | ந. அய்யப்பன் | மின்பாதை ஆய்வாளர் |
| 4. | அ. பால்ராஜ் | மின்பாதை ஆய்வாளர் |
| 5. | பொ. ராஜா | மின்பாதை ஆய்வாளர் |
| 6. | சாலைமலைச் செல்வம் | வணிக ஆய்வாளர் |
| 7. | நூ. முகம்மது பரித் | கேங்மென் |
| 8. | பா. முத்தீஸ்வரன் | கேங்மென் |
| 9. | A. ராஜபாண்டி | கேங்மென் |
| 10. | ச. பிரேம்குமார் | கேங்மென் |
| 11. | பெ. கருப்பசாமி | கேங்மென் |
| 12. | வே. கோபாலகிருஷ்ணன் | கேங்மென் |
| 13. | இரா. ஆனந்தராஜ் | கேங்மென் |
| 14. | நா. விஜயன் | Wireman |
| 15. | கே.ச. சதீஷ்குமார் | கேங்மென் |

# தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன்
# TAMILNADU ELECTRICITY BOARD EMPLOYEES FEDERATION

பதிவு எண் : 3600 / CNI

**விருதுநகர் மின்பகிர்மான வட்டக்கிளை**

## 28.01.2022 கண்டன ஆர்ப்பாட்ட அறிவிப்பும்

**அதனைத்தொடர்ந்து மேற்பார்வை பொறியாளர் / விருதுநகர் அவர்களின் அழைப்பின்பேரில்**

## 27.01.2022 அன்று நடைபெற்ற நேரடி பேச்சுவார்த்தை விபரங்கள்

தோழர்களே, தோழியர்களே! வணக்கம்.

தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் விருதுநகர் கிளையின் செயற்குழு கூட்டத்தில் எடுத்த முடிவின்படி 10 அம்ச கோரிக்கைளை நிறைவேற்ற வலியுறுத்தி கடந்த 5.01.2022 அன்று மேற்பார்வை பொறியாளர் அவர்களுக்கு 15 நாட்களுக்குள் பேச்சுவார்த்தை நடத்தி சுமூக தீர்வு காண கேட்டுக்கொண்டு தீர்வு கிடைக்கவில்லையெனில் 28.01.2022 அன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அறிவித்து கடிதம் கொடுக்கப்பட்டது. பிரிவு வாரியாக சென்று தொழிலாளர்ளை சந்தித்து கண்டன ஆர்ப்பாட்டத்திற்கான துண்டு பிரசுரம் வழங்கி திட்ட அலுவலகம் மற்றும் கோட்ட அலுவலகங்கள் முன்பு கண்டன ஆர்ப்பாட்ட பேனர் வைத்து கண்டன ஆர்ப்பாட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ள அறைகூவல் விடுக்கப்பட்டது. இந்நிலையில் 27.01.2022 அன்று நேரடி பேச்சுவார்த்தைக்கு வரும்படி மேற்பார்வை பொறியாளர் அவர்களிடமிருந்து அழைப்பு பெறப்பட்டு இரவு 8.00 மணிக்கு மேல் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

**நிர்வாக தரப்பு**

1. **மேற்பார்வை பொறியாளர்** விருதுநகர்
2. **செயற்பொறியாளர் (பொது)** விருதுநகர்
3. **நிர்வாக அலுவலர்** விருதுநகர்

**தொழிற்சங்க தரப்பு**

1. திரு. **S. இளங்கோவன்** தலைவர்
2. திரு. **Er. ராதாகிருஷ்ணன்** B.E., செயலாளர்
3. திரு. **G. பாலசுப்பிரமணியன்** பொருளாளர்
4. திரு. **K. ஞானகுரு** மாநில உபதலைவர்

பேச்சுவார்த்தை துவக்கத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் அறிவிப்பு தொடர்பாக எடுத்த நடவடிக்கைகள் குறித்து நமது சங்க செயலாளர் முகவரியிட்டு நிர்வாக தரப்பில் ஒரு கடிதம் கொடுக்கப்பட்டது. அதன்மீது நாம் நடத்திய பேச்சு வார்த்தையில் பல பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. சில பிரச்சனைகள் சம்மந்தமாக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி கூறியதாலும் எழுத்து பூர்வமாக வழங்கப்பட்ட கடிதத்தின் அடிப்படையில் **28.01.2022 வெள்ளிக்கிழமை நடைபெற இருந்த கண்டன ஆர்ப்பாட்டம் ஒத்தி வைக்கப்படுகிறது** என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

கண்டன ஆர்ப்பாட்டத்திற்கான தயாரிப்பு பணிகளை சிறப்பாக நடத்திட ஆயத்த பணிகளில் ஈடுபட்ட வட்டகிளை அனைத்து பொறுப்பாளர்களுக்கும் அனைத்து பணியாளர்கள், கேங்மேன் பணியாளர்களுக்கும், எம்ப்ளாயீஸ் பெடரேஷன் விருதுநகர் கிளையின் சார்பாக வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் இப்பிரச்சினை குறித்து மின்வாரிய தலைவர், இயக்குநர் விநியோகம் மற்றுமுள்ள உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுத்த எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மாநில பொதுச்செயலாளர் தோழர். A. சேக்கிழார் அவர்களுக்கும் பேச்சுவார்த்தை நடத்தி சுமூக தீர்வு காண நடவடிக்கை எடுத்த மேற்பார்வை பொறியாளர் / விருதுநகர் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

**27.01.2022ல் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது, மேற்பார்வை பொறியாளர் விருதுநகர் அவர்களால் நமது சங்க செயலாளருக்கு கொடுத்த கடிதத்தின் நகல்**

### தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் லிமிடெட்

அனுப்புநர்

பொறிஞர் **K. தேன்மொழி** M.E.,
மேற்பார்வை பொறியாளர்,
விருதுநகர் மின்பகிர்மான வட்டம்,
விருதுநகர்.

பெறுநர்

செயலாளர்
தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு
எம்ப்ளாயீஸ் பெடரேஷன்,
விருதுநகர்

க.எண். 012/நிமே/நி.பி.3/உ.2/கோ.சங்கம்/2022, நாள் : 27.01.2022

அய்யா,

பொருள் : தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் சங்கத்தினரின் கோரிக்கைகள் தொடர்பாக 28.01.2022 வெள்ளிக்கிழமை மாலை 5.20 மணிக்கு நடைபெற உள்ள கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு விபரம் தெரிவித்தல் - தொடர்பாக

தொடர்ச்சி.... பின்பக்கம்

தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் சங்கத்தினரின் கோரிக்கைகள் தொடர்பாக 28.01.2022 வெள்ளிக்கிழமை மாலை 5.20 மணிக்கு நடைபெற உள்ள கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு கீழ்கண்டவாறு விபரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

1. வாரிய விதிகளின்படி பணியாளர்கள் பணி தலைமை இடத்தில் தங்கி இருக்க வேண்டும். அதிலும் களப்பணி பணியாளர்களின் பணியானது பொதுமக்களின் அத்தியாவசிய தேவையான மின்சாரம் தடைபடும் போது, அதை உடனுக்கு உடன் சரிசெய்வது ஆகும். எனவே, விடுமுறை நாட்களில் ஏற்படும் மின்தடைகளை சரிசெய்து பொதுமக்களுக்கு சேவை செய்வது மட்டுமே நமது குறிக்கோள். மேலும், **உரிய பாதுகாப்பு விதிகளுக்குட்பட்டு கேங்மேன் பணியாளர்களுக்கு பணி வழங்கிட சம்மந்தப்பட்ட அலுவலர்கள் / முகவர்களுக்கு ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது.**

2. மறைந்த செல்வன். க. காளிராஜ் குடும்பத்தினரிடம் குடும்ப நல சேமநிதி ரூ.**2,75,000/-** க்கான காசோலை 27.01.2022 அன்று வழங்கப்பட்டுள்ளது. மேலும் வேலையாள் இழப்பீடு சட்டத்தின் கீழ் ரூ.**12,33,387/-** -க்கான அனுமதி 10.01.2022 அன்று உரிய வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கான நிதி விரைவில் பெற்று, அதனை மதுரை / தொழிலாளர் ஆணையர் அவர்களிடம் வைப்பீடு செய்து, உரிய வாரிசுதாரர்களுக்கு மதுரை / தொழிலாளர் ஆணையர் அவர்களால் பங்கீட்டு வழங்கப்படும்.

3. விபத்தில் எலும்பு முறிவு ஏற்பட்டு மருத்துவ சிகிச்சை மேற்கொண்ட, திரு. வி.முருகேசன், கேங்மேன் அவர்களின் மருத்துவ கட்டணசெலவுத் தொகைக்கான கருத்துரு, செயலாளர் / செயலகக்கிளை / சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

4. காரியாபட்டி தெற்கு பிரிவில் எவ்வித மின்விபத்தும் ஏற்படவில்லை என செயற்பொறியாளர் / பகிர்மானம் / அருப்புக்கோட்டை அவர்களால் 31.12.2021 அன்று அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

5. உதவிமின் பொறியாளர் / செங்கமலநாச்சியார்புரம் அவர்களின் மீது வாரியவிதி முறைகளின் படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், அன்னாரை மாறுதல் செய்வதற்கு தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு / சென்னை அவர்களிடம் அனுமதி பெற்று மாறுதல் செய்யப்படும்.

6. மின்மாற்றி பழுதானால் அதை சரிசெய்ய, சிறப்பு பராமரிப்பு பிரிவிற்கு அனுப்பாமல், தனியார் நிறுவனத்தில் பழுதுபார்க்கும்பணி மேற்கொள்வது தொடர்பாக, எவ்வித புகார்களும் இவ்வலுவலகத்தில் பெறப்படவில்லை.

7. மின்கம்பங்கள், தளவாட சாமான்கள் கொள்முதல் செய்வது விருதுநகர் மின்பகிர்மான வட்டத்தின் அதிகார வரையறைக்கு உட்பட்டதல்ல.

8. வாரிய விதிமுறைகளுக்கு உட்பட்டு விருப்பமாறுதல் தொடர்பான உத்தரவுகள் வழங்கப்பட்டு வருகிறது.

9. இயன்றவரை களப்பணியாளர்கள் மாற்றுப்பணியில் அலுவலகப்பணிக்கு பயன்படுத்துவது தவிர்க்கப்பட்டு வருகிறது.

10. தங்களின் கடித எண். 01, நாள் 05.01.2022 நாளிட்ட சங்க பேச்சுவார்த்தை தொடர்பான கடிதம் மீது, உரிய நிர்வாக அலுவலர் அவர்கள் உடல் நிலை சரியில்லாத காரணத்தினாலும் மற்றும் அவர்களது தாயார் இயற்கை எய்திவிட்டதாலும் 11.01.2022 முதல் 23.01.2022 வரை தொடர் விடுப்பில் இருந்ததால், பேச்சுவார்த்தைக்கு அழைத்திட இயலவில்லை என்ற விபரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

27/1/22

மேற்பார்வை பொறியாளர்,
விமிபவ/விருதுநகர்.

நகல் : தலைமைப்பொறியாளர் / பகிர்மானம் / திருநெல்வேலி-11
நகல் : இயக்குநர் / பகிர்மானம் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் / 144, அண்ணாசாலை / சென்னை-02.
நகல் : தலைவர் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் / 144, அண்ணா சாலை / சென்னை-02

**ஆகவே தோழர்களே, தீர்வு காணப்படாத பிரச்சனைகளுக்கு தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி, தீர்வு காணப்படும்.**

ஒன்றுபடுவோம்! போராடுவோம்!! வெற்றி பெறுவோம்!!!

<u>தோழமையுடன்</u>

| S. இளங்கோவன் | D. முனியாண்டி | R. ராதாகிருஷ்ணன் B.E., | A. ஜான் ஆசிர்வாதம் | G. பாலசுப்பிரமணியன் |
|---|---|---|---|---|
| தலைவர் | செயல் தலைவர் | செய்லாளர் | அமைப்புச் செயலாளர் | பொருளாளர் |

**விருதுநகர் வட்டக்கிளை**

பாதுகாப்புடன் பணி செய்திடுவோம்! விபத்திற்கு விடை கொடுத்திடுவோம்!

**TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ் ஆண்டுச் சந்தா ரூ.200/-**

**ஆயுள் சந்தா ரூ.2000/- செலுத்தி மின்வாரிய செய்திகளை படித்துப் பயன்பெறுங்கள்**

28.01.2022

● விஜயா பிரஸ், சிவகாசி. ✆ 221965

## வாரியத்திற்கு நமது கடிதங்கள்

பெறுநர்: நாள் : 02.02.2022

**தலைவர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : ஒப்பந்த தொழிலாளர்கள் - நிரந்தரம் - நீதிமன்ற வழக்கு எண். WP 4061/2013- விசாரணை *01.202.2022* - உயர்நீதிமன்ற உத்தரவு - தொடர்பாக.**

சென்னை உயர்நீதிமன்றம் முதல் பெஞ்ச், நேற்று 01.02.2022 நடத்திய WP No. 4061/2013 வழக்கு விசாரணையில்

Tamilnadu Industrial Establishments (Conferment of Permanent status to Workmen) Act 1981ன்படி மின்சார வாரியத்தில் 480 நாட்கள் தொடர்ச்சியாக பணி செய்து தொழிலாளர் ஆய்வாளர் (Inspector of Labour) அவர்களால் வேலை வழங்க உத்திரவிடப்பட்டு வேலை கேட்டு விண்ணப்பித்துள்ள வர்களுக்கு 7 தினங்களுக்குள் பணி வழங்கிட வேண்டும் என உத்திரவிடப்பட்டுள்ளதாக எங்களது வழக்கறிஞர் மூலம் அறிகிறோம்.

எனவே தலைவர் அவர்கள் மேற்கண்ட நீதிமன்ற உத்திரவு தொடர்பாக விரைந்து நடவடிக்கை எடுத்து 10.08.2007க்கு பிறகு தொழிலாளர் ஆய்வாளர் இடத்தில் உத்தரவு பெற்று விண்ணப் பித்துள்ள அனைவருக்கும் பணி வழங்கிட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள
**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

★★★

பெறுநர்: நாள் : 02.02.2022

**தலைவர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : மேற்பார்வை பொறியாளர் / மேட்டூர் பணிமனை வட்டம் - வாரிசு வேலை மற்றும் ஊர் மாறுதல் உத்தரவுகளை திரும்ப அனுப்பியுள்ளது தொடர்பாக.**

**பார்வை : க.எண் *1141*/ செ.பொ/இ&ப/மே/நிபி/நிஉ.*1*/கோ.வி.மா/*2021* நாள்: *21.12.21***

தலைமை பொறியாளர் பணியமைப்பு அலுவலகத்திலிருந்து விருப்ப மாறுதல் மற்றும் வாரிசு வேலையில் பணியமர்த்தல் போன்று குறிப்பிட்ட தொழிலாளர்களை மேட்டூர் பணிமனை வட்டத்திற்கு ஒதுக்கீடு செய்ததை அவசியமற்ற காரணங்களைக் கூறி பார்வை (1)ல் கண்டுள்ளபடி உத்தரவுகளை திரும்ப அனுப்பியுள்ளார்கள்.

தலைவர் அவர்கள் தகுந்த உத்திரவிட்டு தலைமை பொறியாளர் அலுவலக உத்திரவுகளான

1. கு.எண். 050249/543/G42/G42/2021-1 நாள்: 30.11.2021
2. கு.எண். 074938/1700/G43/G432/2021 நாள்: 30.12.2021
3. கு.எண். 074993/1695/G43/G432/2021-16 நாள்: 09.12.2021

ஆகிய உத்திரவுகளில் உள்ளவர்களை மேட்டூர் பணிமனை மின்வட்டத்தில் பணியேற்பு செய்ய மீண்டும் உத்தரவு வழங்கும்படி தலைமை பொறியாளர் (பணியமைப்பு) அலுவலகத்திற்கு தகுந்த உத்திரவிட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள
**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

★★★

பெறுநர்: நாள் : 29.01.2022

**தலைவர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : NPKRR மாளிகை - பத்தாவது தளம் - பைக்காரா மற்றும் ஹவார்டு கூட்ட அரங்குகள் - தொடர்பாக.**

**பார்வை : *2022 ஜனவரி 26ம் தேதி - தினமலர் - பத்திரிக்கை செய்தி.***

பார்வையில் கண்டுள்ள பத்திரிக்கை செய்தியின் வாயிலாக தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகம் செயல்படும் NPKRR மாளிகை 10வது தளத்தில் உள்ள ‘‘பைக்காரா மற்றும் ஹவார்டு’’ கூட்ட அரங்குகளை வாடகைக்கு விடுவதற்கான முடிவினை எடுத்துள்ளதாக அறிகிறோம்.

மின்சார வாரிய தலைமை அலுவலகம் நடைபெற்று வரும் வளாகத்தில் தனியார் வாடகைக்கு கூட்டம் நடத்திட அனுமதிப்பது என்பது மின்சார வாரிய தலைமை அலுவலகத்தின் தனித்தன்மை கெட்டுப் போக வழிவகுக்கும், 10வது தளம் உட்பட கீழ்தளம் வரை நமது மின்சார வாரிய தலைமை அலுவலக பணிகள் நடந்து வரும் இடத்தில் வெளிநபர்கள் யார் வேண்டுமானாலும் வந்து போகும் அளவில் அனுமதிப்பது என்பது நமது அலுவலகத்திற்கு பாதுகாப்பற்ற தன்மையையும் உருவாக்கும், என்பதோடு மட்டுமல்ல தமிழக அரசின் தலைமைச் செயலகம் போன்று மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களுக்கான மின் அலுவலகப் பணிகள் நடைபெற்று வரும் மிகப் பெரிய நிறுவனத்தின் தலைமை அலுவலகம் என்பதால் நமது மின்சார வாரிய வளாகத்திற்குள் தனியார்கள் வந்து கூட்டம் நடத்துவதற்காக வாடகைக்கு விடுவதற்காக முடிவு எடுத்திருந்தால் நிறுத்தி வைத்து முடிவை மறுபரிசீலனை செய்து அம்முடிவை கைவிட வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள
**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

## கேங்மென் - விபத்து - மருத்துவ சிகிச்சை செலவுத் தொகை - வாரியம் அளித்த உத்தரவு

### TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED

Secretariat Branch,
144, Anna Salai,
Chennai - 600 002.

**Memo NBo. 34051/A10/A101/2021-2, Dated : 04.01.2022**

***Sub :*** TANGEDCO - Secretariat Branch - Thiru. M. Vijayakumar, Gangman (Trainee), O/o. the AE/ Town / North / Ramnad, Ramnad EDC - Met with a Departmental Non-fatal Electrical Accident - Treatment taken at M/s. Grace Kennett Foundation Hospital, Madurai - Payment to the individual - Sanctioned - orders - Issued.

***Ref :***
1) (Per.) FB TANGEDCO Proceedings No. 22 (SB) dated : 06.05.2013.
2) From the SE/Ramnad EDC Lr. No. 004414/Adm.Officer/ Adm. 3/ Asst. 1/MRI/2021, dt. 3.9.2021
3) From the SE/ Ramnad EDC Lr. No SE/REDC/RMD-TA/Adm. 3/ F.Accident/D.No./2021, dt. 9.9.2021 and 13.09.2021.
4) This office Lr. No. 34051/A10/A101/2021-1, dt. 7.10.2021
5) From the SE/Ramnad EDC Lr. No. 005269/Adm. Officer / Adm. 3/ Asst. 1/MRI/2021-2, dt. 21.10.20211.

****

In his letter second cited, the Superintending Engineer/Ramnad Electricity Distribution Circle has stated among others Thiru. M. Vijayakumar, Gangman (Trainee) has met with a Departmental Non-fatal Electrical Accident on 26.08.2021 while he was attending the fault at Town (2) feeder in R.S. Mahal Sub-Station. The victim Thiru M. Vijayakumar, Gangman (Trainee) admitted at Government Hospital, Ramnad for first aid treatment and shifted to Grace Kennett Foundation Hospital, Madurai on 27.08.2021 for further treatment, He was diagnosed as 15% Accidental Electrial Burns, Burns wound Excision Done on 02.09.2021. Again Burns Wound Excision + Split Skin Grafting donw was on 13.09.2021. He was discharged on 21.09.2021.

2. The S.E./Ramnad EDC has further stated that the total medical expenditure towards the treatment of Thiru. M. Vijayakumar, Gangman (Trainee), Office of the AE/Town/North/ Ramanathapuram was Rs. 4,00,836/- (Rupees four lakh eight hundred and thirty six only) which has been paid by the individual. Hence, he has requested to sanction the above said amount of to Thiru. M. Vijayakumar, Gangman (Trainee) O/o. the AE/Town/North/Ramanathapuram,

3. The proposal of the SE/Ramnad Electricity Distribution Circle has been examined in detail in the light of the orders issued in the reference first cited, and it has been decided to accept the same. Accordingly, it is hereby ordered that a sum of Rs. 4,00,836/- (Rupees for lakh eight hundred and thirty six only) he sanctioned to Thiru M. Vijayakumar, Gangman (Trainee), O/o. the AE/Town/North/ Ramanathapuram incurred towards the medical expenses for the treatment taken consequent on the Departmental Non-fatal Electrical Accident occured on 26.08.2021.

4. The Superintending Engineer, Ramnad EDC shall arrange for the payment of the amount sanctioned in paragraph 3 above toThiru M. Vijayakumar, Gangman (Trainee), O/o. the AE/Town/ North/Ramanathapuram.

5. The Superintending Engineer/Ramnad EDC is instructed to send the copy of the cheque issued to the individual immediately to this office. The concerned officer is directed to make necessary entry in the Service Book of employee and report the fact.

6. The expenditure is debitable to the following Head of Accoutn:-

**"Tamil Nadu Electricity Board Funds - J. Administrative Expenses - 75.630 - Medical Reimbursement Charges".**

7. The receipt of the Memo. (Per). should be acknowledged.

(BY ORDER OF THE CHAIRMAN-CUM-MANAGING DIRECTOR)

**A. MANIKKANNAN,**
Secretary

---



**கோபம்! தன்னையே அழித்துவிடும்...**

## மதுரையில் கடந்த 20.12.2021 அன்று நடந்த உண்மை சம்பவம்.

அரசு மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர் லாரியை ஓவர்டேக் செய்தபோது, அவரது கார் விபத்துக்குள்ளாகி சம்பவ இடத்திலேயே அந்த இளம் மருத்துவர் பலி.

**செய்தியின் பின்னணி:-** கடந்த 20.12.2021 அன்று காலை, அரசு மருத்துவமனையில் பணிபுரியும் அரசு மருத்துவர், இரண்டு நாட்கள் விடுமுறைக்குப் பின் பணிக்கு தனது சொந்த காரில் சென்று கொண்டிருக்கிறார் மதுரை கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் அவரது காரில், வேகமாக சென்ற லாரி, உரசி நிற்காமல் வேகமாக சென்றுவிடுகிறது.

இதனால் மிகுந்த ஆவேசமுற்று, கோபமுற்ற மருத்துவர், தனது காரில் சுமார் 10 கிலோ மீட்டருக்கு மேல் படுவேகமாக லாரியை துரத்தி சென்றுள்ளார் எதிர்பாராதவிதமாக ரோடு டிவைடரில் கார் மோதி விபத்துக்குள்ளாகி, சம்பவ இடத்திலேயே மருத்துவர் பலி அவருக்கு ஐந்து மற்றும் இரண்டு வயதில் இரண்டு பெண் குழந்தைகள்.

**நியதி:-** கோபப்படாமல், இரண்டு நிமிடங்கள் தன்னை ஆசுவாசப்படுத்தி இருந்தால் இன்று அவர் உயிரோடு இருந்திருப்பார்.

குறள்:- **தன்னைத்தான் காக்கின் சினம் காக்க காவாக்கால்**
**தன்னையே கொல்லும் சினம்.**

''ஒருவர் தன்னைத்தான் காத்து கொள்ள, சினம் வராமல் காத்து கொள்ள வேண்டும். காக்காவிட்டால், சினம் தன்னையே அழித்து விடும்.''

**கோபத்தை குறைப்போம்! மனங்களை கவர்வோம்! உலகை வெல்வோம்!**

**ப. நாகராஜன், எம்.இ.,**
மாநில இணைசெயலாளர்/ தொழில்நுட்ப பிரிவு/ கோவை



# மகிழ்வூட்டும் முதுமை!

பத்மஸ்ரீ டாக்டர் வி.எஸ். நடராஜன்,
முதியோர் நல மருத்துவர்

**தூ**க்கம் என்பது ஒவ்வொருவருடைய உடல்நலம் மற்றும் மனநிலையைப் பொறுத்ததே. தூக்கம் குறைவதால் உடல் சோர்ந்துவிடும். பசி குறையும். அதனால், உண்ணும் உணவின் அளவு குறைய அவருடைய எடையும் குறையும். தலைவலி, தலைபாரம் போன்றவையும் வரலாம். நல்ல தூக்கம் இல்லாதவர்கள், பகலில் மிகுந்த எரிச்சலுடன் இருப்பார்கள்.

**சுகமான தூக்கத்துக்கு...**

பின்வரும் வழிமுறைகளைத் (Sleep hygiene) தவறாமல் பின்பற்றினால் சுகமான தூக்கம் உங்களை ஆரத் தழுவிக்கொள்ளும்.

★ பகலில் 30-40 நிமிடத் தூக்கம் போதும்.

★ மாலையில் செய்யும் உடற்பயிற்சி இரவில் நல்ல தூக்கத்தைக் கொடுக்கும்.

★ தூக்கத்தைக் கெடுக்கும் மாத்திரையைத் தவிர்க்கவும் அல்லது மாலையிலேயே எடுத்துக் கொள்ளவும். உதாரணம்: நீர் மாத்திரை.

★ காபி, மது, புகைப்பிடித்தல் இரவு 8.00 மணிக்குமேல் கூடவே கூடாது.

★ படுப்பதற்கு முன்பு வெந்நீரில் குளித்து விட்டு வெதுவெதுப்பான பால் அருந்தினால் நல்ல தூக்கம் வரும்.

★ வெதுவெதுப்பான பாலில் இரண்டு ஸ்பூன் தேனுடன், ஒரு ஸ்பூன் பொடி செய்யப் பட்ட கசகசாவைக் கலந்து சாப்பிட்டால் நல்ல தூக்கம் வரும் என்று சித்த மருத்துவம் கூறுகிறது.

★ தினமும் குறிப்பிட்ட நேரத்தில் படுக்கைக்குச் செல்ல வேண்டும்.

★ படுக்கை அறை அமைதியான சூழ் நிலையில் சற்று மங்கிய வெளிச்சத் திலிருப்பது நல்லது.

★ படுக்கும் இடத்தைத் தூங்குவதற்கு மட்டும் பயன்படுத்தவும்.

★ படுக்கை அறையில் டி.வி., பார்ப்பதையோ, புத்தகம் படிப்பதையோ அல்லது வானொலி கேட்பதையோ தவிர்ப்பது நல்லது.

★ படுத்த உடனே 30-45 நிமிடங்களுக்குள் தூக்கம் வரவில்லையென்றால் வெளியே சென்று சற்று நடந்துவிட்டு வரலாம் அல்லது படிப்பது, வானொலி கேட்பது போன்ற காரியங்களில் ஈடுபடலாம். தூக்கம் வர ஆரம்பித்தவுடனேயே படுக்கைக்குச் சென்றுவிட வேண்டும்.

★ மன உளைச்சல்களும் கவலைகளும் தூக்கத்தின் எதிரிகள். அதைத் தவிர்க்க, சுமார் அரைமணி நேரம் தியானம் செய்துவிட்டுப் படுக்கைக்குச் சென்றால் ஆழ்ந்த தூக்கம் நிச்சயம்.

சுமார் 70 வயதிற்கு மேற்பட்டவர்கள் பல தொல்லைகளால் சிரமப்படும்போது மன அமைதிக்கான மாத்திரையையோ (Transquilizer) அல்லது தூக்க மாத்திரையையோ (Sedative) டாக்டரின் ஆலோசனைப்படி எடுத்துக் கொள்வது தவறில்லை. தூக்கமின்மைக்கு நோய்கள் ஏதேனும் காரணமாக இருந்தால், அதற்குத் தகுந்த சிகிச்சை அளிக்க வேண்டும்.

பகல் தூக்கத்தைக் குறைத்து, மாலையில் உடற்பயிற்சி செய்ய வேண்டும். இரவில் குறைந்த உணவு, படுப்பதற்கு முன் தியானம், சிறிது வெதுவெதுப்பான பால், அமைதியான சூழ்நிலையல் மனதை ஒருநிலைப்படுத்தித் தூங்க முயற்சிக்க வேண்டும். நாளடைவில் நல்ல உறக்கத்தைப் பெற்று, காலையில் எழுந்தவுடன் புத்துணர்ச்சி பெறுவீர்கள்; மகிழ்ச்சி அடைவீர்கள்!

- *நன்றி:* ***முதுமை எனும் பூங்காற்று***

# தற்பெருமை



**இந்து ராஜேஷ்குமார்**
நிர்வாக உதவியாளர்,
தலைமைப் பொறியாளர் அலுவலகம்
கோவை மண்டலம்

**ந**ம்மை எவரேனும் ஒரேயடியாக புகழ்ந்தால் சுற்றி இருப்பவர்கள் சொல்வார்கள் ''தம்பி ஜாக்கிரதை!'' அவன் உன்னை எதற்காகவோ ஐஸ் வைக்கிறான், என்று.

சுற்றி இருப்பவர்களுக்கு தெரியலாம். ஆனால், பல சமயங்களில் யாருக்கு ஐஸ் வைக்கப் படுகிறதோ, அவர்களுக்கு மட்டும் அது தெரியாது. காரணம், அவர்கள் அந்த புகழ்ச்சியை உண்மை என்று நம்புவதுதான். அது பொய் என உணர்ந்தால் தானே, அது ஐஸ் வைப்பதாக தெரியும்!

ஐஸ் வைக்கப்படுபவர்களுக்கு மட்டும் ஏன் அது தெரியாமல் போகிறது? அப்போது அவர்கள் ஒரு உணர்வின் பிடியில் இருக்கலாம். அந்த உணர்வின் பெயர் ''தற்பெருமை''.

தற்பெருமையின் பிடியில் இருப்பவர்கள் அவர்களை பற்றிப் பொய்யாக சொல்லப்படுவதை கூட உண்மை என்று நம்புவார்கள். பல வெற்றியாளர்கள் குப்புற விழுவது தற்பெருமை உணர்வால்தான். அந்த தற்பெருமை வலையில் விழுந்தால், அறிவு வேலை செய்யாது.

யோசிப்பது, சிந்திப்பது, கேள்விகள் கேட்பது, சந்தேகப்படுவது, ஆராய்வது, அனைத்தும் அறிவின் வேலைகள். அந்த அறிவு வேலை செய்தால் தப்பிப்பார்கள். அறிவு இருந்தும் வேலை செய்யாவிட்டால் சிக்கலில் மாட்டுவார்கள்.

பாராட்டுகள் தேவைதான். எல்லா பாராட்டுகளுக்குப் பின்னாலும் சுயநலம் இருக்காது தான். ஆனால், சிலருடைய இனிக்கும் பேச்சுக்கு பின்னால் வேறு நோக்கம் இருக்கலாம் அவற்றை பற்றிய ஒரு புரிதல் தேவை.

''தற்பெருமை உணர்வா! அப்படி ஒன்றும் எனக்கு இல்லை, நான் ரொம்ப யதார்த்தவாதி என்று உள்ளிருந்து குரல் ஏதும் கேட்கிறதா? அதை நம்பிவிடாதீர்கள். எல்லோருக்குமே அவர்களை பற்றிய கொஞ்சம் அதிகமான நன்மதிப்பு உண்டு.

நாகரிகம் கருதி பாராட்டை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அதில் உண்மை இருக்கும்பட்சத்தில்... ஆனால், அதில் மூழ்கி, நம்பி, அதை ரசிக்க ஆரம்பித்துவிட வேண்டாம். அதிகம் பரிச்சியம் இல்லாதவர்கள் பாராட்டும் போதும், புகழும் போதும் கூடுதல் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

தொடர்ந்து செய்பவர்களை... தவிர்த்துவிட்டால் நலம்.



# வாதம் (காற்று) பித்தம் (நெருப்பு) சிலேத்துமம் (நீர்) 3ம் உடலில் சமநிலையில் நோயில்லை

**தி. பாலகிருஷ்ணன்**
முகவர் முதல் நிலை
கண்ணாம்பாளையம்
கோவை
9976549696

**இதை சமநிலைபடுத்தும் முறைகள்:**

நமது உடலில் காற்றின் செயல்பாடுகளில் மாறுதல் இல்லாமல் இருந்தாலும், உடலில் வெப்ப நிலையை, குறையாமலும் வைத்திருந்தாலும், உடலில் அதிக குளிர்ச்சியும், அதிக வறட்சியும், ஏற்படாத வண்ணம் உடலை பாதுகாப்பாக வைத்திருந்தாலும் நாம் எப்போதும் நோயின்றி வாழ முடியும். இது சித்தர்களின் கருத்தாகும்.

குறிப்பாக வாதம் எனும் காற்றாகிய வாயு பூதம் சமநிலையில் இருந்தாலும், பித்தம் எனும் வெப்பமாகிய, நெருப்பு பூத தத்துவத்தில் மாறுபாடு ஏற்படாமல் இருந்தாலும், கபம் எனும் நீர் தத்துவத்தில் குளிர்ச்சி மீறாமலும், குறையாமலும், உடலை பாதுகாத்து வைத்தால் நோய்கள், நம் உடலில் தோன்றா.

சுற்றுசூழல் - பருவநிலை மாறுபாடு. உண்ணுகின்ற மாறுபாடு உள்ள உணவு மூலமும், இந்த வாத, பித்த, சிலேத்துமம் உடலில் மாறுபடும்.

''மாறுபாடு ஏற்படாத வண்ணம் பாதுகாக்க சித்தர்கள் அருளிய உணவு முறை, பயனளிக்கும் எளிய முறையில்.

1) காலையில் இஞ்சி, இஞ்சி வாத நோய்களை நிவர்த்தி செய்யும்.
''காற்றின் கூறுகள் காலைப் பொழுதில், சற்று மிகையாக இருக்கும். ஒன்று அதிகமாகும்போது மற்றொன்று குறைவாக இருக்கும் இது பிரபஞ்ச நியதி.''
காற்றின் செயல்பாடுகள் உடலில் அதிகமாகும்போது வாதத்தன்மை அதிகமாக பித்த சிலேத்தும விகிதாச்சாரம் சற்று குறைவாக இருக்கும்.

இதை சமநிலைபடுத்த காலையில் இஞ்சியை உண்ண வேண்டும். (இஞ்சி சாறு) 2, 3 கிராம் அளவு) தேனுடன் உட்கொள்ளும் போது, வாதகுணம் குறைந்து பித்த, சிலேத்தும மஞ்சளை, சமன் செய்து முக்குணங்களும், முறையாக இயங்க இஞ்சி உதவுகிறது.

2) கடும் பகல் சுக்கு, சுக்கு பித்த நோய்களை சமன் செய்யும். பகற் பொழுதில், இயற்கையின் சுற்றுப்புற மாற்றத்தால், புவியின் வெப்பம் மிகுதியாகும். இதனால், மனித உடலில், வெப்பம் எனும் பித்தமும் அதிகரிக்க செய்யும். இந்த செயலினால், வாதமும், சிலேத்துமமும் குறைவாக இருக்கும். இதை சமநிலைபடுத்த மதிய வேளையில், சுக்கை உண்ண வேண்டும். உட்கொள்ளும்போது பித்தம் குறைந்து வாத சிலேத்துமங்களின் குணங்கள் சமநிலைபட்டு, முக்குணங்களும் சரியாக இயங்க சுக்கு மாபெரும் சக்தியாக விளங்குகிறது.

3) இரவின் இயக்கத்தில் குளிர்ச்சியின் கூறுகள் மிகுதியாக இருக்கும். நமது உடலிலும், குளிர்ச்சி குணங்கள் அதிகமாக இருக்கும். வாத, பித்தங்கள் குறைவாக இருக்கும். இதை சமநிலைப்படுத்த இரவில் உணவு உண்டபின் கடுக்காய் உண்டு வர, சிலேத்தும குணங்கள் குறைந்து வாத பித்த குணங்கள் நிலை சமன் செய்து உடலில் இயக்கங்களை சமன்படுத்த கடுக்காய் பாலமாக திகழ்கிறது.

*''காலையில் இஞ்சி, கடும் பகல் சுக்கு, மாலையில் கடுக்காய்,*
*மண்டலம் தானுன்ன கோலை ஊன்றி குனிந்து நடப்பவள்*
*குமாரனாகி, குலாவத் துடிப்பாளே.* *- சித்தர்பாடல்*

சித்தர்கள் சொன்ன கற்ப மருந்துகள் உண்பதற்கு நிறைய பத்தியம் உண்டு. பத்தியம் ஏதும் இல்லாமல், உடலுக்கு, எந்த கேடும், வராமல் ஒரு கற்பம் உண்ண முடியும் என்றால், இந்த கற்பத்தை தவிர வேறெதும் இல்லை.

வாத, பித்த, சிலேத்தும குணங்கள் சமநிலைபடாமல், உடலில் ஏற்படும் நோய்களை தீர்ப்பதற்கு மருந்துகளை உண்டு வந்தாலும், நோய் விலகும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

எனவே, கற்ப முறைகளை, முறையாக உண்டு. முக்குணங்களை சமன் செய்து நன்மைகளை பெற்று பிரபஞ்ச ஆசியுடன் வாழ்வாங்கு வாழ சித்தர்கள் வழியை பின்பற்றுவோம்.

**தி. பாலகிருஷ்ணன்**
முகவர் முதல்நிலை
கண்ணம்பாளையம் மாநகர் வட்டம்/கோவை

**சந்தாதாரர்கள் - உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் கவனத்திற்கு**

நமது சங்க இதழான **''எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்''**-ல் தங்களது கருத்துகள், கட்டுரைகள், தங்கள் வட்டத்திற்குட்பட்ட தொழிலாளர்கள் மற்றும் சங்கத்திற்கான செய்திகளை கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்திடுவீர்!

**நிர்வாக ஆசிரியர்,**
**TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்**
39/101, சிங்கண்ணா தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.
✆ : 9841446621
tnebemployeesfederation3600@gmail.com

***குறிப்பு :*** *செய்திகள் வெளியிடுவது ஆசிரியக் குழுவின் முடிவிற்குட்பட்டது.*

# புதிய வினியோக மண்டலங்கள் உருவாக்கம்

**TAMILNADU GENERATION & DISTRIBUTION CORPORATION LTD**
**(ABSTRACT)**

Establishment - Formation of new Distribution Region with Headquarters at Karur, Thanjavur & Thiruvannamalai and shifting of Head Quarters of one Distribution Region from Chennai to Thiruvallur - Orders issued.

---

**(Administrative Branch)**

**(Per.) FB TANGEDCO Proceedings No. 1** **Dated 25.01.2022**

Thai-12, Pilava Varudam,
Thiruvalluvar Aandu 2053

**READ:**

1. (Per) FB TANGEDCO Proceedings No. 11 (Adm. Branch) dated 13.10.2021.
2. Announcement made by the Honourable Minister for Electricity, Prohibition and Excise in the State Legislative Assembly on 07.09.2021.
3. Minutes of 105th meeting of the Board of TANGEDCO Held on 19.01.2022 (Agenda No. TG- 105.63)

**PROCEEDINGS:**

In the reference 1st cited, Board of TANGEDCO has accorded in-principle approved to reorient the existing Electricity Distribution Regions and Electricity Distribution Circles of TANGEDCO to ease down in the balancing in work as well as administration process subject to the condition that the operating staff strength should not be increasd.

i) Formation of Karur Distribution Region with Head Quarters at Karur comprising Karur EDC from Trichy Region, Palladam EDC from Coimbatore Region and Namakkal EDC from Erode Region with some recurring expenditure and non-recurring expenditure of Rs. 23,90,000/- per annum.

ii) Formation of Thanjavur Distribution Region with Head Quarters at Thanjavur comprising Thanjavur, Thiruvarur and Nagapattinam EDC from Trichy Region with some recurring expenditure and non-recurring expenditure of Rs. 23,90,000/- per annum.

iii) Formation of Thiruvannamalai Distribution Region with Head Quarters at Thiruvannamalai comprising Thiruvanamalai and Kallakurichi Electricity Distribution Circles from Villupuram Region and Dharmapuri EDC from Vellore Region with some recurring expenditure and non-recurring expenditure of Rs. 23,90,000/- per annum.

iv) Shifting of Head Quarters of Chennai South Region to Thiruvallur and rename it as Thiruvallur Region with Kancheepuram and Chengalpattu Electricity Distribution Circle and Shifting of Head Quartes of one Chennai EDC to Thiruvallur and rename it as Thiruvallur EDC by duly rationalizing the existing infrastructure in Chennai Regions.












































v) Consequent to the above formation, Villupuram Distribution Region be reconstituted with Villupuram, Cuddalore and Perambalur Electricity Distribution Circles with **"Nil"** expenditure.

vi) Similarly, Trichy Distribution Region be reconstituted with Trichy, Pudukottai and Dindigul Electricity Distribution Circles with **"Nil"** expenditure.

vii) It is directed to identify and re-deploy suitable posts for the newly created Distribution Regions as per requirement so that no additional post is created.

viii) It is directed to reorganise Chennai EDCs and to shift one Regional Head Quarters and one Circle Head Quarters to Thiruvallur.

3) On completion, the entire reorganisation may be placed before the Board.

4) The expenditure is debitable to "TANGEDCO" Funds - Karur, Thanjavur & Thiruvannamalai Regions and shifting of Head Quarters of one Distribution Region from Chennai to Thiruvallur Distribution Circles - some recurring expenditure and non-recurring expenditure - Accounts".

The receipt of the Proceedings shall be acknowledged.

(BY ORDER OF THE BOARD/TANGEDCO)

**R. KRISHNAMOORTHY**
Chief Engineer/Personnel

# 01.01.2022 முதல் அகவிலைப்படி உயர்வு

## தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

**(சுருக்கம்)**

படிகள் - அகவிலைப்படி - 01.01.2022 முதற்கொண்டு உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வீதம் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**(செயலகக் கிளை)**

(நிலை) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்/தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் செயல்முறை ஆணை எண். 06, நாள்: 12.01.2022

மார்கழி - 28-ம் நாள்,
பிலவ வருடம்
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டது:

1. *(நிலை) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்/ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் செயல்முறை ஆணை எண். 191, நாள் : 18.10.2019*
2. *அரசாணை (எழுத்துத் தொடர்) எண். 3, நிதி (படிகள்)த் துறை,ந ாள்: 01.01.2022*

**செயல்முறைகள்:**

பார்வை 1-ல் படிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக செயல்முறை ஆணையில் வாரியத்தின் தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு திருத்தப்பட்ட அகவிலைப்படி கீழ்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது:-

| வ. எண். | எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது | அகவிலைப்படி வீதம் (மாதத்திற்கு) |
|---|---|---|
| 1. | 01.07.2019 | அடிப்படை ஊதியத்தில் 17 சதவீதம் |

2. பார்வை 2-ல் படிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரசு ஆணையில், 01.01.2022 முதற்கொண்டு மாநில அரசு பணியாளர்களுக்கு கீழ்கண்ட திருத்தப்பட்ட வீதத்தில் அகவிலைப்படி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது:-

| வ. எண். | எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது | அகவிலைப்படி வீதம் (மாதத்திற்கு) |
|---|---|---|
| 1. | 01.01.2022 | அடிப்படை ஊதியத்தில் 31 சதவீதம் |

மேற்படி உயர்த்தப்பட்ட அகவிலைப்படி 01.01.2022 முதற்கொண்டு வழங்கப்படும் என்றும், 01.01.2020 முதல் 31.12.2021 வரையிலான காலத்திற்கு 17% அகவிலைப்படியே தொடர்ந்து வழங்கப்பட வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

3. தமிழ்நாடு அரசின் மேற்காணும் ஆணையைப் பின்பற்றி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், அதன் தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு அகவிலைப்படியைக் கீழ்கண்டவாறு உயர்த்தி வழங்கிட ஆணையிடுகிறது:-

| வ. எண். | எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது | அகவிலைப்படி வீதம் (மாதத்திற்கு) |
|---|---|---|
| 1. | 01.01.2022 | அடிப்படை ஊதியத்தில் 31 சதவீதம் |

4. மேற்கண்ட உயர்த்தப்பட்ட வீதத்திலானது அகவிலைப்படியானது, பணமில்லா பரிவர்த்தனை முறையான மின்னணு தீர்வு சேவை (ECS) மூலம் வழங்கப்படும். மேலும் 01.01.2020 முதல் 31.12.2021 வரையிலான காலத்திற்கு 17% அகவிலைப்படியே தொடர்ந்து வழங்கப்பட வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

